1972 ஆகஸ்ட் 19]

Tamil Nadu State Road Development and Traffic Planning Committee

* 117. Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Tamil Nadu State Road Development and Traffic Planning Committee has submitted any study Report to the Government?

தமிழ்நாடு மாநில சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்ட குழு

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு மாநில சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழு ஆய்வு அறிக்கை எதனையும் அரசுக்குப் பணிந்தனுப்பி யுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை, ஐயா.

Passes for free travel for the Orthopaedically handicapped persons.

* 118 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of orthopaedically handicapped persons, to whom passes for free travel in the State Transport buses were issued during 1971-72 in the Madras City; and

(b) whether the same facilities are being continued in the Pallava Transport Corporation?

உடல் ஊனமுற்றோருக்கு இலவச பயண அனுமதிச் சீட்டுகள்

திரு எம். ராஜா அய்யர்: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரில், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய 1971-72 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர் எத்தனை பேருக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன?

(இ) அதே வசதிகள் பல்லவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : (அ) 1971-72-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய, உடல் ஊனமுற்ற 91 பேருக்கு இலவசப் பயணச் சலுகைகள் வழங்கப்பட்டன.

(இ) ஆம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இத்தகைய இலவச அனுமதிச்சீட்டு வழங்குவதுடன் அவர்களைக் கூட்டிச்செல்லும் அவர்களுடைய உதவியாளர்களுக்கும் இத்தகைய இலவச அனுமதிச்சீட்டு வழங்கப்பட வேண்டும் என்று அரசுக்கு விண்ணப்பம் வந்திருக்கிறதா ? அப்படியானல் அரசு அதுபற்றி என்ன முடிவெடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களைக் கூட்டிச் செல்பவர்களுக்கு இப்போது அத்தகைய இலவச அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படுவது இல்லை. அவசியமானல் அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

Ex-servicemen in Thanjavur district

* 119 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of ex-servicemen living in the district of Thanjavur;

(b) the number of employed and unemployed; and

(c) the number of persons to whom lands have been assigned freely?

தஞ்சை மாவட்ட முன்னுள் படை வீரர்கள்

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்துவரும் முன்னுள் படை வீரர்கள் எத்தனை பேர் ?